பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 02 2025 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் தரமான மருத்துவ சேவைகள் அனைவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டுமென குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.
2. கடலோர காவல்படையின் திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.
3. தேசிய கல்விக் கொள்கை போட்டிச் சூழலை இளையோர் எதிர்கொள்ளும் வகையில் அமைந்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.
4. ஆம் ஆத்மி ஆட்சியின்போது பின்பற்றப்பட்ட தவறான தில்லி மதுபான கொள்கை காரணமாக தில்லி அரசுக்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கணக்கு தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
5. ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை – பெங்களூரு அணிகள் மோதுகின்றன.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

நாட்டில் தரமான மருத்துவ சேவைகள் அனைவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டுமென குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

பாட்னா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் நூற்றாண்டு விழாவில் உரையாற்றிய அவர், சிறிய நகரங்களிலும் நவீன மருத்துவ வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று தெரிவித்தார்.

மருத்துவக் கல்லூரிகளில் ஆராய்ச்சிப் பணிகளை அதிகரிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

கடந்த சில ஆண்டுகளில் பீகார் மாநிலத்தில் சுகாதார வசதிகளை மேம்படுத்த அம்மாநில அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் மகிழ்ச்சி அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய தொழில்நுட்ப யுகத்தில் மருந்துவத் துறையிலும் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது அவசியம் என்றும் அவர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு மற்றும் ரேபோட்டிக்ஸ் ஆகியவை மருத்துவ செயல்பாடுகளை எளிமையாகவும், துல்லியமாகவும் மாற்றி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

சென்னை, ஹைதராபாத், மும்பை, இந்தூர் ஆகிய நகரங்கள் சிறப்பு சிகிச்சை மையங்களாக திகழ்ந்து வருவதாக திருமதி திரௌபதி முர்மு குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

கடலோர காவல்படையின் திறனை மேம்படுத்தும் வகையில் மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கடலோர காவல்படையில் வீர தீர செயல் புரிந்தவர்களுக்கு அவர் பதக்கங்களை வழங்கி கௌரவித்தார்.

வரும் நிதி ஆண்டில் கடலோரக் காவல்படைக்கு ஒன்பதாயிரத்து 676 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இது முந்தைய நிதி ஆண்டில் ஒதுக்கப்பட்டதைவிட 26 புள்ளி ஆறு சதவீதம் அதிகம் என்று அவர் குறிப்பிட்டார்.

தற்போது உலக அளவில் மிகச் சிறந்த திறன் கொண்ட கடற்படையில் ஒன்றாக இந்திய கடலோரக் காவல்படை திகழ்வதாக அமைச்சர் தெரிவித்தார்.

சைபர் தாக்குதல், தரவு கசிவு, ரேடார் இடையூறுகள் உட்பட பல்வேறு தொழில்நுட்ப அச்சுறுத்தல்களை கடலோரக் காவல்படை எதிர்கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருவதாக திரு ராஜ்நாத்சிங் கூறினார்.

**[]<<<>>>[]**

கிராமப்புற கைவினைப் பொருட்கள் தயாரிப்புகளை ஊக்குவிக்க வேண்டுமென்று மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

உத்திரபிரதேசத்தின் நொய்டாகாட்டில் சரஸ் கைவினைப் பொருள் கண்காட்சியை அவர் இன்று காணொலி வாயிலாக திறந்து வைத்து பேசினார்.

இந்த கண்காட்சியில் சுய உதவிக் குழுவினர் பெருமளவில் பங்களித்துள்ளதாகவும், அவர்களது தயாரிப்புகளுக்கு மக்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை இணை அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி, மகளிரை தொழில் முனைவோராக உயர்த்தும் வகையில் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுவதாகக் கூறினார்.

நாட்டின் முன்னேற்றத்தில் மகளிரின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்றும், அவர்களது தயாரிப்புகள் சர்வதேச சந்தையை எட்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த கண்காட்சியில் 30 மாநிலங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்கள் அரங்குகளை அமைத்துள்ளன.

**[]<<<>>>[]**

தேசிய கல்விக் கொள்கை போட்டிச் சூழலை இளையோர் எதிர்கொள்ளும் வகையில் அமைந்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

கோவை விளாங்குறிச்சியில் தனியார் பள்ளி ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசிய அவர், தேசிய கல்விக் கொள்கையில் தொழில்நுட்பம், ஆராய்ச்சி, புதிய கண்டு பிடிப்புகளை ஊக்குவிக்கும் அம்சங்கள் இடம்பெற்றுள்ளதாகக் கூறினார்.

நாடு முழுவதும் கல்வி நிலையங்களை அதிகரிப்பது, மருத்துவ படிப்புகளுக்கான சேர்க்கையை அதிகரிப்பது, புதிய பல்கலைக்கழகங்களை உருவாக்குவது உள்ளிட்டவற்றுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டை வல்லரசாக்கும் முயற்சியில் இளைஞர்களின் பங்களிப்பு அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் கேலோ இந்தியா பிட் இந்தியா திட்டங்களை மத்திய அரசு முன்னெடுத்து வருவாகவும் திரு எல் முருகன் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தில் கடந்த டிசம்பர் மாதத்தில் 16 லட்சத்திற்கும் அதிகமானோர் இணைந்துள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தைக் காட்டிலும் ஒன்பது புள்ளி ஆறு ஒன்பது சதவீதம் பேர் கூடுதலாக டிசம்பர் மாதத்தில் இணைந்திருப்பதாக அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

18 வயதிலிருந்து 25 வயதுக்கு உட்பட்ட தொழிலாளர்கள் நான்கு லட்சத்து 80 ஆயிரம் பேர் புதிதாக இணைந்திருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . .

*(சவுண்ட் பைட் - **Song** - 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளா நாளை நிறைவடைய உள்ள நிலையில் இன்றும் லட்சக்கணக்கானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

அதிகாலை முதல் மாலை நான்கு மணி வரை 97 லட்சத்து 21 ஆயிரம் பேர் திரிவேணி சங்கமத்தில் நீராடி உள்ளதாக உத்திரபிரதேச அரசு தெரிவித்துள்ளது.

இதுவரை 64 கோடியே 33 லட்சம் பேர் புனித நீராடி உள்ளதாகவும் அம்மாநில அரசு கூறியுள்ளது.

நிறைவு நாளான நாளைய தினமும் அதிக அளவில் பக்தர்கள் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதால் பிரயாக்ராஜ் ரயில் நிலையத்தில் பக்தர்கள் தங்குமிடம் உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மகா கும்பமேளாவின் ஒரு பகுதியாக செக்டார் நான்கில் டிஜிட்டல் கண்காட்சி மையம் நடைபெற்று வருகிறது.

செயற்கை நுண்ணறிவு மற்றும் ஹாலோகிராம் உள்ளிட்ட தொழில்நுட்பங்களின் உதவியுடன் புராணக் கதைகள் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனை மூன்று லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்வையிட்டுள்ளதாகவும், இதன் மூலமாக ஒரு கோடியே 75 லட்சம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாக உத்திரபிரதேச அரசு தெரிவித்துள்ளது.

இந்த டிஜிட்டல் கண்காட்சி மையத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பூட்டான் மன்னர் திரு ஜிக்மே கேசர் நம்க்கியால் ஆகியோரும் கண்டு களித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - **Song** - 8 நொடிகள்)*

**[]<<<>>>[]**

தில்லியில் முந்தைய ஆம் ஆத்மி ஆட்சியின்போது பின்பற்றப்பட்ட தவறான தில்லி மதுபான கொள்கை காரணமாக அரசுக்கு இரண்டாயிரத்து இரண்டு கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கணக்கு தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தில்லி சட்டப்பேரவையில் தாக்கல் செய்த தணிக்கை அறிக்கையில், முந்தைய ஆட்சியின்போது குறிப்பிட்ட சிலருக்கு மதுபான கடை நடத்துவதற்கான உரிமம் வழங்கும் வகையில் மதுபானக் கொள்கை திருத்தப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

இந்த கொள்கை காரணமாக அரசுக்கு போதிய வருவாய் கிடைக்காததுடன், போலி மதுபானங்களை ஒழிக்க முடியவில்லை என்றும், உரிய எண்ணிக்கையில் சில்லரை விற்பனைக் கடைகள் திறக்கப்படவில்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி மறைவின்போது தில்லியில் சீக்கியர்களுக்கு எதிராக நடைபெற்ற கலவரம் தொடர்பான வழக்கில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சஜன் குமாருக்கு ஆயுள் தண்டனை விதித்து தில்லி சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த சிறப்பு நீதிபதி காவேரி பவேஜா, திரு சஜன் குமார் மீதான குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டிருப்பதால் அவரை கடந்த 18-ஆம் தேதி குற்றவாளி என அறிவித்திருந்த நிலையில், இன்று இந்த தீர்ப்பை வழங்கியுள்ளார்.

1984-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த கலவரத்தின்போது தில்லி சரஸ்வதி விஹார் பகுதியில் தந்தையும், மகனும் கொல்லப்பட்ட வழக்கில் அவருக்கு இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சத்திஷ்கர் மாநிலம் பிஜப்பூர் மாவட்டத்தில் ஒன்பது நக்ஸலைட் தீவிரவாதிகள் இன்று காவல்துறையினர் மற்றும் ரிசர்வ் காவல் படையினர் முன்னிலையில் சரணடைந்தனர்.

இவர்களில் நான்கு பேரை பிடித்துத் தருவோருக்கு 23 லட்சம் ரூபாய் சன்மானம் தரப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தாக காவல்துறை தெரிவித்துள்ளது.

சரணடைந்த நக்ஸலைட்களுக்கு மாநில சரணடைதல் மற்றும் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் தலா 25 ஆயிரம் வழங்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை – பெங்களூரு அணிகள் மோதுகின்றன.

பெங்களூருவில் இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி – குஜராத் அணிகள் மோதுகின்றன.

பெங்களூருவில் இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டி நாளை குஜராத் மாநிலம் வதோதராவில் தொடங்குகிறது.

இந்திய வீரர்கள் 165 பேர் இப்போட்டியில் கலந்து கொள்கின்றனர்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இலங்கை, கொரியா, ஆன்டிகுவா, பார்புடா உள்ளிட்ட நாடுகள் இப்போட்டியில் பங்கேள்கின்றன.

**[]<<<>>>[]**

புரோ ஹாக்கி லீக் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா சூட்-அவுட் முறையில் இரண்டு – ஒன்று என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து அணியை வென்றது,

ஆடவர் பிரிவில் இந்தியா - இங்கிலாந்து இடையேயான இரண்டாவது ஆட்டம் இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

***End of News***